செய்தி வெளியீடு எண் :43 நாள் :23.06.2020

# தேனி மாவட்டம்

## கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகள் - 23.06.2020

**1.தேனி மாவட்டத்தில் கொரோனா தொற்று நிலவரம் :**

தேனி மாவட்டத்தில் புதிதாக 48 நபர்களுக்கு கொரோனா தொற்று ஆய்வக பரிசோதனை முடிவுகளின் படி உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தேனி மாவட்ட எல்லையில் அமைந்துள்ள தேவதானபட்டி சோதனைச்சாவடியில் வெளிமாவட்டங்களிலிருந்து தேனி மாவட்டத்திற்கு வந்துள்ள நபர்களிடமிருந்து சேகரித்த மாதிரிகளின் ஆய்வக பரிசோதனை முடிவில் கம்பம் பகுதியைச் சேர்ந்த 2 நபர்கள், தேனி நகராட்சி பகுதியைச் சேர்ந்த 2 நபர்கள், கொடைக்கானல் பண்ணைக்காடு பகுதியைச் சேர்ந்த 1 நபர் என மொத்தம் 5 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அரசு மருத்துவமனைகளில் எடுக்கப்பட்ட மாதிரிகளின் ஆய்வக பரிசோதனை முடிவில் பெரியகுளம் பகுதியைச் சேர்ந்த 12 நபர்கள், கெங்குவார்பட்டி பகுதியைச் சேர்ந்த 1 நபர், கம்பம் பகுதியைச் சேர்ந்த 1 நபர், சின்னமனூர் பகுதியைச் சேர்ந்த 2 நபர்கள், குச்சனூர் பகுதியைச் சேர்ந்த 1 நபர் என மொத்தம் 17 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளின் ஆய்வக பரிசோதனை முடிவில் பெரியகுளம் வடகரை மற்றும் தென்கரை பகுதிகளைச் சேர்ந்த 16 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. தொற்று கண்டுள்ள அனைவரும் ஏற்கனவே தொற்று கண்டுள்ள நபர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள் என கண்டறியப்பட்டுள்ளது.

அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேகரிக்கப்பட்ட மாதிரிகளின் ஆய்வக பரிசோதனை முடிவில் தேனி நகராட்சி பகுதியைச் சேர்ந்த 7 நபர்கள், வீரபாண்டி பகுதியைச் சேர்ந்த 1 நபர், தேவாரம் பகுதியைச் சேர்ந்த 1 நபர், வத்தலகுண்டு பகுதியைச் சேர்ந்த 1 நபர் என மொத்தம் 10 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தொற்று கண்டறியப்பட்டுள்ள 48 நபர்களில் 38 நபர்கள் தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும், 6 நபர்கள் பெரியகுளம் அரசு மருத்துவமனையிலும் 2 நபர்கள் மதுரை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும், 1 நபர் மதுரை தனியார் மருத்துவமனையிலும், 1 நபர் சென்னை அரசு மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தேனி மாவட்டத்தில் இதுவரை தொற்று கண்டறியப்பட்டுள்ள 284 நபர்களில் 129 நபர்கள் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 2 நபர்கள் இறந்துள்ளனர். 92 நபர்கள் தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும், 9 நபர்கள் கம்பம் அரசு மருத்துவமனையிலும், 32 நபர்கள் பெரியகுளம் அரசு மருத்துவமனையிலும், 6 நபர்கள் போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனையிலும், 2 நபர் ஓடைப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலும், 6 நபர்கள் மதுரை தனியார் மருத்துவமனையிலும், 4 நபர்கள் மதுரை அரசு மருத்துவமனையிலும், 1 நபர் சென்னை மருத்துவமனையிலும் 1 நபர் கோயம்புத்தூர் அரசு மருத்துவனையிலும் சிகிச்சை பெற்று வருகிறார்.

**2. மாதிரிகள் சேகரிப்பு மற்றும் ஆய்வக முடிவுகள்:**

இன்று தேனி மாவட்டத்தில்

- சோதனைச்சாவடிகளில் வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து வந்த 76 நபர்கள்
- தொற்று கண்ட நபர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் மற்றும் சுற்று வட்ட பகுதிகளில் 280 நபர்கள்
- அரசு மருத்துவமனைகள், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 414 நபர்கள்
- மொத்தம் 770 நபர்களுக்கு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வக பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்திற்கு சமீப காலங்களில் வெளி மாவட்டம் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து வந்தவர்களுக்கும் அவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்களுக்கும் அதிக அளவில் கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் அனைவரும் கிருமி நாசினி பயன்பாடு, முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி கடைபிடிப்பதுடன் வெளி மாவட்டம், வெளிமாநிலத்திலிருந்து வந்துள்ள நபர்கள் தனிமைப்படுத்துதல் மேற்கொள்வதை உறுதி செய்துகொள்வதுடன் அவர்களிடமிருந்து சமூக இடைவெளியை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**